**செய்தி குறிப்பு எண்.1** **நாள். 2.1.2008**

# செய்திக் குறிப்பு

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இன்று 02.01.2008 அன்று தாம்பரம் மற்றும் ஆலந்தூர் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்களை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுடனும், தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடனும் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுடனும் பார்வையிட்டார்கள்.

| | |
|---|---|
| 1. | குரோம்பேட்டை இராதாநகரில் கட்டப்பட்டுவரும் – இரயில்வே கீழ்ப்பாலத்தை பார்வையிட்டு பணிகளை விரைவுபடுத்துமாறு கூறினார்கள் |
| 2. | பல்லாவரத்தில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தைப் பார்வையிட்டு வடிவமைப்பினை துரிதப்படுத்தி பணிகளை விரைவுபடுத்த கூறினார்கள் |
| 3. | பல்லாவரம், தர்கா ரோடு அருகில் கட்டப்பட்டு வரும் இரயில்வே கீழ்ப்பாலத்தை பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தக் கூறினார்கள். |
| 4. | பல்லாவரம் குட்செட் சாலையில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தின் பணிகள் முடிந்த பின் சாலைப் பணிகளை துரிதப்படுத்த கூறினார்கள் |
| 5. | இப்பகுதி நடுவன் அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் பகுதியில் இருப்பதால் இதற்கான நுழைவு அனுமதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளதை அறிவுறுத்தி சாலைப் பணிகளை விரைவுபடுத்த கூறினார்கள். |
| 6. | திரிசூலத்தில் கட்டப்பட்டு வரும் இரயில்வே கீழ்ப்பாலப் பணிகளை பார்வையிட்டு துரிதப்படுத்த கூறினார்கள். |
| 7. | மீனம்பாக்கம் இரயில்வே கீழ்பாலத்தில் ஒப்பந்தம் கோரியுள்ளபடி பணியினை விரைவாக தொடங்குவதற்கு அறிவுறுத்தினார்கள். |
| 8. | தில்லைகங்கா நகர் இரயில்வே கீழ்பாலத்தில் ஜி.எஸ்.டி. ரோடு சந்திப்பு வரை நடைபெற்று வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு துரிதப்படுத்தக் கூறினார்கள். |
| 9. | ஆலந்தூர் சக்கரப்பாணித் தெருவில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தின் பணிகளை பார்வையிட்டு துரிதப்படுத்த அறிவுறுத்தினார்கள் |
| 10. | தாம்பரம் சானட்டோரியம் அருகே கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தின் பணிகளை துரிதப்படுத்த அறிவுறுத்தினார்கள். |
| 11. | தாம்பரத்தில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை பார்வையிட்டு, இரயில்வே பகுதியில் வரும் நிலத்தினை கையகப்படுத்தும் பணியினை துரிதப்படுத்தக் கூறினார்கள். |
| 12. | வண்டலூரில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை பார்வையிட்டு ஒப்பந்தக் காலத்திற்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள். |

தமிழகத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள சேதத்தால் 24,558 கி. மீ. நீளச் சாலைகளும், 64 பெரிய பாலங்களும், 1449 சிறு பாலங்களும் பழுதுப்பட்டுள்ளது. இதனை தற்காலிகமாக சீரமைத்திட தேவைப்படும் சுமார் ரூ. 280 கோடிக்கான அறிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தற்பொழுது 14,000 கி. மீ. சாலைகளும், 60 பாலங்களும், 1096 சிறு பாலங்களும் சீரமைக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெள்ள பாதிப்பிற்காக முதற்கட்டமாக அனைத்து துறைகளுக்கும் ரூ. 200 கோடி வழங்கியுள்ளார்கள்.

தமிழ்நாடு முழுவதும் சுமார் ரூ. 3000 கோடி அளவில் 106 இரயில்வே மேம்பாலங்களும், கீழ்ப்பாலங்களும் வேலை நடைபெற்றுக்கொண்டு முன்னேற்றத்தில் உள்ளன.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.